[1997 மார்ச் 15

202—

சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல்

***4593—திரு. பி. என். வல்லரசு:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி கல்லூத்து, வெள்ளைமலைப்பட்டி வட்டாரத்தில் கிடைக்கும் வெள்ளைக் கல்லைப் பயன்படுத்தி சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உசிலம்பட்டி தொகுதி கல்லூத்து, வெள்ளைமலைப்பட்டி வட்டாரத்தில் கிடைக்கும் சுண்ணாம்புக் கல்லைப் பயன்படுத்தி சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டில் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இன்றைய முதல்வர் அவர்கள் இருந்தபோது என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியை தொழில் ரீதியாக மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்திருந்தார்கள். ஆனால் அதற்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற @ அதை இரத்துச் செய்துவிட்டார்கள். எனவே, என்னுடைய தொகுதியில் எந்தவொரு தொழிற்சாலையும்...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் @போன்ற வார்த்தையைப் பயன்படுத்துவது நல்லதல்ல. எனவே, அதைத் தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட உத்தரவிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வல்லரசு, நீங்களே வாபஸ் பெற்றுவிடுங்கள்.

@ உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க திரும்பப் பெறப்பெற்றது.

1997 மார்ச் 15]

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். கடந்த ஆட்சியில் அதை ரத்து செய்துவிட்டார்கள். எனவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே தாங்கள் நிறைவேற்றிய அந்தக் கொள்கைக்கேற்ப, என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் தொழிற்சாலையை ஏற்படுத்தும் வண்ணம், கல்லூத்து, வெள்ளமலைப்பட்டி போன்ற பகுதிகளில் வெள்ளைக்கல் கிடைக்கின்ற காரணத்தாலும், அது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும், அதைப் பயன்படுத்தி நீங்கள் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு கருணையுள்ளத்தோடு முன் வருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் அவர்கள் குறிப்பிடுகிற கல்லூத்துப் பகுதியில் கிடைக்கிற சுண்ணாம்புக்கல், அதாவது வெள்ளைக்கல், மெக்னீசியம் கலந்த கல்லாக இருக்கின்றது. அது மாத்திரம் அல்ல, அதனுடைய மொத்த இருப்புகூட 2 இலட்சம் டன்னாகத்தான் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அது ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை அமைப்பதற்குப் போதுமானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பின்தங்கிய பகுதியாக அறிவித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பின் தங்கிய பகுதியாக அறிவிப்பது என்பது வேறு, சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பது என்று அறிவிப்பது வேறு. அதிலே இந்த சிமெண்ட் போய் ஒட்டாது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்பு, இந்தப் பேரவையிலே தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தினுடைய ஆண்டறிக்கை எங்களுக்கெல்லாம் வழங்கப்பட்டது. அதில் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை 154 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்ற குறிப்பும் இருந்தது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 8 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கி வருகின்ற அந்த சிமெண்ட் தொழிற்சாலை நவீனப்படுத்தப்பட்டால், அது இலாபத்தில் இயங்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, வருகின்ற ஆண்டிலாவது நிதி ஒதுக்கீடு செய்து அந்த ஆலை நவீனப்படுத்தப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் இரண்டு சிமெண்ட் ஆலைகள் இருக்கின்றன. ஒன்று, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை, அது பெரம்பலூர், திருவள்ளுவர் மாவட்டத்தில் இருக்கின்றது. மற்றொன்று, காமராசர் மாவட்டம், ஆலங்குளத்தில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலங்குளத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். இந்த இரண்டு தொழிற்சாலைகளுடைய நிலை என்னவென்றால், அரியலூர் சிமெண்ட் ஆலை இலாபத்தில் இயங்குகிறது. 28-2-1997 நிலவரப்படி இலாபம் 14.91 கோடி ரூபாய். அதிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 878. அடுத்து, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நஷ்டத்தில் இயங்குகிறது. அவர்கள் குறிப்பிடுவதைப்போல 7.46 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்குகிறது. இது 28-2-1997 உள்ள நிலவரப்படியாகும். அதில் உள்ள பணியாளர்களுடைய எண்ணிக்கை 1225. நஷ்டத்தில் இயங்குவதற்கு உள்ள காரணங்களில் இதுவும் ஒன்று. அது மாத்திரம் அல்ல, அது நவீனப்படுத்தப்பட வேண்டுமென்பதற்கு முக்கியமான காரணம் என்னவெனில் பழமையான இயந்திரங்களாலும், ஈரப்பத தொழில் நுட்பத்தாலும் தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்கி வருகிறது என்று மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. அதற்காக 155 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தொழிற்சாலையை, ஈரப்பதத் தொழில் நுட்பத்திலிருந்து உலர்ப்பத தொழில் நுட்பத்திற்கு மாற்றம் செய்கின்ற செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது. அது விரைவுபடுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. மாரிமுத்து.

முற்பகல் 9-45

திரு. அ. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதி, மரக்காணம் பகுதியில் தீப்பரங்கினி, அனமந்தை மற்றும் வடகரம் போன்ற பகுதிகளில் சிலிகாசென் என்ற வெள்ளை மணல் கிடைக்கிறது. கடந்த 1989-90 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கண்டிப்பாக அடுத்த முறை உங்களுக்கு ஒரு தொழிற்சாலை உருவாகும் என்று சொன்னார்கள். எனவே, தயவுகூர்ந்து, கருணை உள்ளம் கொண்ட தலைவர் அவர்கள், உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள் அங்கே கிடைக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1997 மார்ச் 15]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கழகத் தலைவர் கலைஞர் சொன்னது கண்ணாடித் தொழிற்சாலை. இப்போது முதலமைச்சர் பேசிக் கொண்டிருப்பது சிமென்ட் தொழிற்சாலை. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஆர். அழகர்ராஜா.

திரு. என். ஆர். அழகர்ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது, ஆலங்குளத்தில் அமைந்துள்ள அரசு சிமென்ட் தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குவதாகக் குறிப்பிட்டார்கள். அதனுடைய ஆண்டு அறிக்கையைப் படிக்கின்றபோது அங்கே 1,200 தொழிலாளர்கள் பணிபுரிவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே இயங்குகின்ற பல்வேறு சிமென்ட் தொழிற்சாலைகளில், 4 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய சிமென்ட் தொழிற்சாலைகளிலெல்லாம் கிட்டத்தட்ட ரூ. 60 கோடி, 70 கோடி என்று லாபத்தினைக் கொடுக்கின்றபோது, ஆலங்குளத்திலும், அரியலூரிலும் உள்ள சிமென்ட் தொழிற்சாலைகள் 4 லட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக இருந்தாலும் கூட ஒன்றில் 14 கோடி ரூபாய் லாபம் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இதிலே அரசு அதிக கவன்ம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கவனம் செலுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீ. வெ. கிருஷ்ணன்.

திரு. சீ. வெ. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் பாளையத்தில் குவாரி அமைப்பதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு சார்ந்த குழு ஒன்று வருகை தந்து டிரில் போட்டு சேம்பிள் எடுத்து, எவ்வளவு ஆழத்திலே, என்ன குவாலிட்டியில் இருக்கிறது என்று அறிய, அதனை லேப்புக்கு அனுப்பி, 92 சதவீத குவாலிட்டி இருக்கிறது என்று தெரிய வந்தது. ஆகவே, பாளையத்திலே அரசு சிமென்ட் ஆலை ஒன்று அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 15

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது 15 ஆண்டு காலமாக நடைபெறுகிற முயற்சி. இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 203, திரு. துரை. சந்திரசேகரன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

203—

பெண்கள் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டுதல்

***554—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாற்றில் உள்ள காமராசர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், திருவையாற்றில் உள்ள காமராசர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தற்போது பஞ்சாயத்து ஒன்றிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்கென்று சொந்தக் கட்டிடமோ மற்றும் நிலமோ இல்லை. இப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டத் தேவைப்படின் நிலம் கையகப்படுத்தப்பட்டு நிதிநிலைமைக்கேற்ப கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. வினா எண் 204, திரு. வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

204—

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***2770—திரு. வி. திருஞானசம்பந்தம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—